# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2020.09.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2020, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து பொருளாதாரச் சேவை விதிப்பனவை நீக்குவதாகும்.*

ச.வ.- ஓ. 62/2019

## 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தின் 2 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் "ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமாக ஒவ்வொரு ஆளிடமிருந்தும், பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2020 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதிக்கு முன்பதாக ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமாக ஒவ்வொரு ஆளிடமிருந்தும், பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்:".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.